1973 ஆகஸ்ட் 14]

செய்யவேண்டுமென்று பரிந்துரையாகத்தான் நிதித்துறை காட்டியிருக்கிறார்கள். இடைமுறிவு ஏற்பட்டுவிட்டால் அவர்களுடைய பணியை நிரந்தரமாக்கத் தடையாகிறது. ஆகவே, விதிவிலக்கு அளித்து, அதற்குப் பிறகு நிரந்தரம் செய்யவேண்டுமென்று இருக்கிறது. இப்போது இருக்கும் விதிமுறையைத் தளர்த்தி, பணி உறுதி செய்யவேண்டுமென்பதற்குத் தான் இப்போது பொது (சர்வீஸ்) இலாகா, நிதி இலாகா ஆகியவற்றின் ஆலோசனை கேட்கப்படுகிறது.

## மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்ட மன நோயாளிகள்.

*131 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா— முற்ப 9-3

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் மன நோயினால் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர், ஆண்டு வாரியாக?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரு விவரப்பட்டியல் @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

## திருப்பூர் நகருக்கு வடிகால் திட்டம்.

*132 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், வினா எண். 82-க்கு 8-12-72 அன்று பேரவையில் அளித்த விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி மன்றம் வடிகால் திட்டத்திற்காக ரூபாய் 50,000 குடிநீர் வாரியத்திற்குச் செலுத்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், மேற்படி வேலைகள் எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) ஆம். ஆய்வு வேலைக்கான செலவுத் தொகையைப் பின்வருமாறு திருப்பூர் நகரசபை செலுத்தியிருக்கிறது.

7-9-72-ல் ரூ. 10,000

31-1-73-ல் ரூ. 40,000

(இ) ஆய்வுப் பணி 12-2-72-ல் மேற்கொள்ளப்பட்டது. டிசம்பர் 73-ல் அந்தப் பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

@ 389-ம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.